## மார்ச் – 11 – திங்கள்

**ஆண்டவரின் நியமங்கள் சரியானவை: அவை இதயத்தை மகிழ்விக்கின்றன. திபா. 19:8**

### முதல் வாசகம் : லேவியர் 19 : 1 – 2, 11 - 18

ஆண்டவர் மோசேயிடம் கூறியது: ”நீ இஸ்ரயேல் மக்களிடம் கூறவேண்டியது. தூயோராய் இருங்கள். ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்! களவு செய்யாமலும், பொய் சொல்லாமலும் ஒருவரை ஒருவர் வஞ்சியாமலும்,என் பெயரால் பொய்யாணையிட்டு, உங்கள் கடவுளின் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தாமலும் இருங்கள். நான் ஆண்டவர்!அடுத்திருப்பவரை ஒடுக்கவோ அவருக்குரியதைக் கொள்ளையிடவோ வேண்டாம் வேலையாளின் கூலி விடியும்வரை உன்னிடம் இருத்தல் ஆகாது.காது கேளாதோரைச் சபிக்காதே! பார்வையற்றோரை இடறச் செய்யாதே! உன் கடவுளுக்கு அஞ்சி நட. நான் ஆண்டவர்!தீர்ப்பிடுகையில், அநீதி இழைக்காதே. சிறியோர் பெரியோர் என முகம் பாராது, உனக்கு அடுத்து வாழ்வோர்க்கு நேர்மையுடன் நீதி வழங்கு.உன் இனத்தாருக்குள் புறங்கூறித் திரியாதே. உனக்கு அடுத்து வாழ்பவரின் குருதிப் பழிக்குக் காரணம் ஆகாதே! நான் ஆண்டவர்!உன் சகோதரரை உன் உள்ளத்தில் பகைக்காதே! உனக்கடுத்தவர் பாவம் செய்யாதபடி அவரைக் கடிந்து கொள்.பழிக்குப் பழியென உன் இனத்தார்மேல் காழ்ப்புக் கொள்ளாதே. உன் மீது நீ அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக! நான் ஆண்டவர்!

**பதில்பாடல் :** ஆண்டவருடைய வார்த்தைகள் வாழ்வு தரும் ஆவியைக் கொடுக்கின்றன.

### நற்செய்தி : மத்தேயு 25 : 31 - 36

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : ”வானதூதர் அனைவரும் புடைசூழ மானிடமகன் மாட்சியுடன் வரும்போது தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். எல்லா மக்களினத்தாரும் அவர் முன்னிலையில் ஒன்று கூட்டப்படுவர். ஓர் ஆயர் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரித்துச் செம்மறியாடுகளை வலப்பக்கத்திலும் வெள்ளாடுகளை இடப்பக்கத்திலும் நிறுத்துவதுபோல் அம்மக்களை அவர் வெவ்வேறாகப் பிரித்து நிறுத்துவார். பின்பு அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, ”என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள் உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள் தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள் அன்னிய னாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள் நான் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள் நோயுற்றிருந்தேன், என்னைக் கவனித்துக் கொண்டீர்கள் சிறையில் இருந்தேன், என்னைத் தேடிவந்தீர்கள்” என்பார். அதற்கு நேர்மையாளர்கள் ”ஆண்டவரே, எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உணவளித்தோம், அல்லது தாகமுள்ளவராகக் கண்டு உமது தாகத்தைத் தணித்தோம்? எப்பொழுது உம்மை அன்னியராகக் கண்டு ஏற்றுக் கொண்டோம்? அல்லது ஆடை இல்லாதவராகக் கண்டு ஆடை அணிவித்தோம்? எப்பொழுது நோயுற்றவராக அல்லது சிறையில் இருக்கக் கண்டு உம்மைத்தேடி வந்தோம்?” என்று கேட்பார்கள். அதற்கு அரசர், ”மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்” எனப் பதிலளிப்பார். பின்பு இடப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, ”சபிக்கப் பட்டவர்களே, என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தணிக்கவில்லை. நான் அன்னிய னாய் இருந்தேன், நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. நோயுற்றிருந்தேன், சிறையிலிருந்தேன், என்னைக் கவனித்துக் கொள்ளவில்லை” என்பார். அதற்கு அவர்கள், ”ஆண்டவரே, எப்பொழுது நீர் பசியாகவோ, தாகமாகவோ, அன்னியராகவோ, ஆடையின்றியோ, நோயுற்றோ, சிறையிலோ இருக்கக் கண்டு உமக்குத் தொண்டு செய்யா திருந்தோம்?” எனக்கேட்பார்கள். அப்பொழுது அவர், ”மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” எனப் பதிலளிப்பார். இவர்கள் முடிவில்லாத் தண்டனை அடையவும் நேர்மையாளர்கள் நிலை வாழ்வு பெறவும் செல்வார்கள்“ என்றார்.

**தியானம்:** நாங்கள் பாவவழியில் இருந்து மனமாற்றம் அடைந்து தூயவர்களாக வாழவேண்டும். ஏனெனில் எங்கள் ஆண்டவர் தூயவராக இருக்கின்றார் அப்போதுதான் ஆண்டவராகிய இயேசு எம் உள்ளமாகிய இல்லத்தில் வந்து தங்குவார். அப்போது எமது வாழ்க்கையும மாற்றமடைந்து எமது சொல்லும் செயலும் இறைவனுக்கு உகந்ததாகக் காணப்படும். அதற்காக நாங்கள் ஒவ்வொருவரும் அவர் எங்களிடம் வருவதற்கு தாகம் கொள்ள வேண்டும். அன்று சக்கேயு தான் பாவியாக இருந்தாலும், இயேசுவைக் காண வேண்டும் என்று தாகங்கொண்டவனாக மரத்தின் மீது ஏறினான். இயேசுவோ அவனது உள்ளத்தை அறிந்தவராக “சக்கேயுவே இறங்கி வா இன்று நான் உன் வீட்டில் தங்கவேண்டும்’’ என்று அழைக்கின்றார். அவரது உள்ளத்தில் இயேசுவும் குடிகொண்டார் அவரது வாழ்வில் மாற்றத்தைக் கண்டார். ஆனால் இன்று எங்கள் மத்தியில் இயேசுவே இல்லை என்பவர்கள் ஒருபுறம், இயேசுவை எற்றுக் கொண்டது போன்று தளர்வுற்ற விசுவாசத்துடன் வெளிவேடமாக வாழ்பவர்கள் மறுபுறம். இதனால்தான் எமது வாழ்வு மாற்றமடையாமல் மேலும் மேலும் பாவத்திற்கு அடிமைப்பட்டு சிதறிப்போகின்றது. இன்று பேசும் பேச்சுக்களால், தேவையற்ற தீய சிந்தனைகளால் எங்களையே அழித்துவிடுகிறோம். நாங்கள் எமது பாவவாழ்விலிருந்து மனமாறி வாழ்ந்தால்தான் இறுதி நாட்களில் அவரது அரியணையில் அமர முடியும். எனவேதான் நற்செய்தி வாசகத்தில் மண்ணுலகில் இறைவனுக்கு ஏற்ற வகையில் வாழ்ந்தவர்கள் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், மற்றவர்கள் யாவரும் சபிக்கப்பட்டவர்கள் என்று தரம்பிரிகப்படுவதைப் பார்க்கின்றோம். எனவே நாங்கள் மண்ணுலகிலே இறைவனுக்கு விருப்பமான செயல்கழளப் புரிந்து இறைவனின் ஆசீரைப் பெற எங்களை தயார்படுத்துவோம்.